புதுச்சேரி அரசு
வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை
**கூடுதல் வேளாண்மை இயக்குநர் அலுவலகம்**
காரைக்கால்

## செய்தி குறிப்பு

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக புயல் மற்றும் கன மழை காரணமாக நெற்பயிரில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. பயிர்கள் தீவிர தூர்கட்டும் பருவம் மற்றும் கதிர் தோன்றும் பருவங்களில் உள்ளது.

இந்நிலையில் விவசாயிகள் உடனடியாக வயலில் தேங்கியுள்ள மழைநீரை வடித்து பயிரைக் காப்பாற்றிட வழிவகை செய்திட வேண்டும்.

இளம்பயிர்கள் நீரில் கரைந்து உள்ள நிலையில் இருந்தால் தழை சத்து மற்றும் துத்தநாக சத்து குறைபாடு காரணமாக இலைகள், தண்டுகள் இளம்மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

இதற்கு 1 கிலோ ஜிங்க் சல்பேட், 2 கிலோ யூரியா உடன் 200 லி. தண்ணீரில் கலந்து கை தெளிப்பான் கொண்டு இலை வழியாக தெளித்து மகசூல் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கலாம்.

மேலும். 1 கிலோ சூடோமோனாஸ் மருந்தை 200 லி. தண்ணீரில் கலந்து 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளித்து நோய் தாக்குதலில் இருந்து பயிரை காப்பாற்றலாம்.

மேலும் நெற்பயிரில் இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், புகையான் போன்ற பூச்சிகளை கண்காணிக்க வேண்டும் பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் போகும்போது வேம்பு சார்ந்த மருந்துகளை உபயோகப்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இலை சுருட்டுப் புழு தாக்குதல் அதிகமாக தென்பட்டால் புளுபென்டமைடு 20% WG மருந்தை ஏக்கருக்கு 50 கிராம் அல்லது கார்டாப் ஹைட்ராக்ஸைடு 400 கிராம் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இந்த தட்பவெட்ப சூழ்நிலை நெற்பயிரில் நோய்கள் தோன்றுவதற்கு ஏதுவாக உள்ளது. எனவே, பாக்டீரியா இலை கருகல் நோய் அறிகுறி காணப்பட்டால் கீழ்கண்ட பரிந்துரைகளை கடைபிடித்து கட்டுப்படுத்தலாம்

i) 20 சதவீத பசுஞ்சாண கரைசல் அதாவது 40 கிலோ புதிய சாணத்தை 100 லி. நீரில் கரைத்து 12 மணி நேரம் ஊரவைத்து பின்பு தண்ணீரில் கலந்து 200 லிட்டராக்கி தெளிக்கவும் (அல்லது)

ii) சூடோமோனாஸ் ஏக்கருக்கு 1 கிலோ (அல்லது)

iii) ஸ்டிரப்டோமைசீன் சல்பேட்டுடன் டெட்ரா சைக்கிளின் கலந்த மருந்து கலவை 120 கிராமுடன் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் (அல்லது)

iv) காப்பர் ஹைட்ராக்ஸைடு 400 கிராம் மருந்தை 200 லிட்டர் நீருடன் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.

எனவே, வேளாண் தொழில்நுட்பங்களை நெற்பயிரின் சேத நிலைக்கு ஏற்ப தேர்வு செய்து பயிர் மகசூல் இழப்பின்றி காப்பாற்றலாம் என்று காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அறிவிக்கின்றார்.

GOVERNMENT OF PONDICHERRY DEPT. OF INFORMATION & PUBLICITY KARAIKAL

கூடுதல் வேளாண்மை இயக்குநர் (பொ.)
காரைக்கால்

E:\New 2020-21\AO (FTP)\AIR Message.docx | 29